**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**<u>ஆணை நாள்</u>: 03.11.2020**

**<u>முன்னிலை</u>**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**<u>வழக்கு எண். SA12591/F/2019</u>**

**திரு இரா. அரவிந்த் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**அரசு சார்புச் செயலாளர்,**
**பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்**
**சிறுபான்மையினர் நலத்துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை - 600 009. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **08.07.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **12.08.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **14.12.2019** |

******

## <u>ஆணை</u>

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு இரா. அரவிந்த், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 08.07.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் 13.04.2019 நாளிட்டு அரசு செயலர் அவர்களுக்கு திரு.பி.சத்தியநாராயணா என்பவர் மீது புகார் மனு சமர்ப்பித்ததாகவும், அம்மனு மீதான நடவடிக்கையோ எந்த தகவலோ தனக்கு கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். திரு.பி.சத்தியநாராயணா, நிதி ஆலோசகர் / மற்றும் நிறுவனச் செயலர் (பொறுப்பு) பதவியில் இருந்த பொழுது திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த 916 பெண் பயனாளிகளுக்கு ரூபாய் 6,59,865/- அதிகமான வட்டி விகிதத்தை கடன் திருப்பிச் செலுத்தும் அட்டவணையை காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு தவறுதாலாக ஆய்வு செய்யாமல் அனுப்பியுள்ளார். இது அரசு விதிகளின்படி மிகவும் தவறானது மற்றும் தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும். ஆகவே, மேற்படி புகார் மனு மீதான நடவடிக்கை தொடர்பான கோப்பு மற்றும் கோப்பின் நோட்பைல் (NoteFile) உட்பட அனைத்துப் பக்கங்களின் ஒளி நகல்கள் அசல் உண்மை நகல் என்று சான்றளித்து வழங்கவும். இதுவரை இப்புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனில் இந்த 2 மாதம் கால தாமதத்திற்கு காரணமானவர்கள் மீது அரசு விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் நடவடிக்கை எடுத்த விவரங்களை தெரிவிக்குமாறும், அத்தகவல் திருப்தி அளிக்கவில்லை என்றால் மனுதாரர் யாருக்கு மேல்முறையீடு செய்யவேண்டும் என்பது போன்ற தகவல் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 24.09.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 12.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ துணைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 09.10.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக ஏற்கனவே தகவல் வழங்கிவிட்டதாக தெரிவித்துள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 14.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 08.07.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய**

**பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர்** 08.07.2019 **தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம்,** 2005, **பிரிவு** 6(1)**-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம்,** 2005, **பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA12591/F/2019
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்
சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

மனுதாரர்
திரு இரா. அரவிந்த்,
எண் 1/1, சரோஜினி பாய் தெரு,
மதியழகன் நகர், சாலிகிராமம்,
சென்னை - 600 093.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-11.11.2020